# சங்கீத பாடப் புத்தகம்

## பிள்ளைப்பாட்டும் கதைப்பாட்டும்

---

I, II, III வகுப்புக்களுக்குரியது

1939-வது ௵, ஜூலை-௴ சர்க்கார் வெளியிட்டுள்ள
பாடத்திட்டத்தை அனுசரித்து எழுதப்பெற்றது.

MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

---

**V. RAMUDOO AIYER,**
ASST., E. R. HIGH SCHOOL, TEPPAKULAM,
TRICHINOPOLY.

---

Copyright Reserved.] 1939. [விலை அணா 0-2-6

7205a

# Dedicated to Children

# A Note of Appreciation.

This small booklet of nursery rhymes and songs has been prepared with special attention to the requirements of the new syllabus for elementary education for pupils reading in classes 1 to 3. The style adopted is easy and simple. Particular care has been taken in the selection of words and the lessons are well graded. I congratulate the author on his work and I am confident that it will commend itself to the educational authorities.

Trichinopoly.
23—9—39.

(Sd.) N. HALASYAM,
B. A., B. L., M. L. A.,
*Madras.*

# முகவுரை

ஸங்கீதமானது, பாடுவோர் கேட்போராகிய இருவரது மனத்திலும் உற்சாகம், ஊக்கம், ஆனந்தம், பரவசம் இவற்றை யளிக்குமோர் அரிய மருந்து. சிறுவர்க்கோ, செவிக்கினிய சிறந்த விருந்து. பசுவும், சிசுவும், பாம்பும் ஸங்கீதத்தில் ஈடுபடுகின்றன. எனவே, ஸங்கீத இன்பம் நுகராதாரும் உளரோ உலகினில்?

இங்ஙனம் ஸங்கீதத்தின் மேன்மை கண்டு, அவற்றை, வருங்கால மக்களாகிய ஆரம்பப் பாடசாலையில் பயிலும் முதல் ஐந்து வகுப்பு மாணவர்களுக்குக் கட்டாயப்பாடமா (Compulsory Subject) கவும், 6, 7, 8 வகுப்பு மாண வர்களுக்கு இச்சா பாடமா (Optional Subject) கவும் தற்கால அரசாங்கத்தார் சமீபத்தில், ஸங்கீதத்தைப் பாடத் திட்டத்தில் சேர்த்து வெளியிட்டிருப்பது போற்றத் தக்க தோர் விஷயமாகும்.

அந்தப் பாடத் திட்டத்தின் முதல் பக்கத்திற் கண்ட கட்டாயப் பாடங்களுள் ஏழாவதாகிய 'ஸங்கீதம்' என்ற பாடத்திற்கென, 33-ஆவது பக்கத்திற் சொல்லிய குறிப்புக்களைத் தழுவி, ஆரம்பப் பாடசாலைகளின் 'முதல் மூன்று வகுப்புக்களுக்குரிய' இப்புத்தகம் வெளியிடப்பட் டிருக்கிறது. இது மூன்று பகுதிகள் கொண்டது. ஒவ் வொன்றிலும் 10 பாட்டுக்களுள்ளன. இவை, பிள்ளைப் பாட்டு, (Nursery Rhymes) கதைப் பாட்டு, (Story Songs) நாட்டுப் பாட்டு (Folk Songs) என மூன்று வகைப்பாட்டுக்களாகும்.

பாட்டுக்களிலுள்ள சிற்சில பதங்களை, ஆசிரியர்கள், அந்தந்த ஊருக்கும் வகுப்புக்கும் தக்கபடி பிள்ளைகளின் மழலைச் சொற்களிலேயே சொல்லச்செய்வது நலம். உதாரணமாக, 'மாப்பாய்ச்சி! மாப்பாய்ச்சி! மடியின்மேலே உட்காரு' என்பதற்கு 'மாப்பாச்சி! மாப்பாச்சி! மடியின் மேலே ஒக்காச்சு' என்று சொல்லச்செய்யலாம்.

கதைகளிலுள்ள நீதிகளைப் பிள்ளைகள் தாமாகவே அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கங்கொண்டு, அவை பாட்டுக்களில் கொடுக்கப்படவில்லை.

ஆசிரியரும், அதிகாரிகளும், பெற்றோரும், மற்றோரும், முன்பு என்னால் வெளியிடப்பட்டுள்ள 'அபிநயப் பாட்டும் கதையும்' என்ற புத்தகத்தை ஆதரித்தது போலவே இதையும் ஆதரித்து எனக்கு மென்மேலும் ஊக்கம் அளிக்குமாறு வேண்டுகின்றனன். இதில் ஏதேனும் குறைகளிருப்பின் அவற்றை எடுத்துக்காட்டும் அறிஞர்களுக்கு வந்தனம்.

இப்புத்தகம் அச்சிடப் பொருளுதவிய அன்பருக்கு என்னுடைய உள்ளன்பு உரித்தாகும். மற்றும் இது வெளியாவதற்குதவிய பலர்க்கும் எனது நன்றியறிதல் உரியதே.

V. R.

# முதல் வகுப்பு

## பிள்ளைப் பாட்டு.

---

### 1. கோழி

1. கொக்கரக்கோ கோ
கையிலென்ன ?
கம்புதாரேன்
கொத்தித்தின்னு.

2. பெட்டைக் கோழி !
முட்டை எங்கே ?
குட்டிப் பூனை
கொண்டு போச்சோ ?

3. காலை வேளை
கத்தும் சேவல் !
நாளை வாபோ
நேரமாச்சு.

## 2. காக்கா

1. காக்கா காக்கா கருப்பண்ணே!
காலையில் நீ எழுப்பண்ணே

2. கையிலுள்ள பண்டத்தைக்
காணாமல் கொண்டோடாதே.

3. தீனிகண்டால் தின்னவே
தேடுவாயே தோழரை

4. ஆகாயத்தோட்டி உன்னை
ஆண்டவனும் காப்பானே.

## 3. குருவி

1. குருவி குருவி கூப்பிடு
கூட்டில் நின்றே கூப்பிடு

2. கிட்டவந்தா லுன்னையே
கட்டியே பிடிப்பேனே

3. கஷ்டப்பட்டுக் கூட்டை நீ
கட்டுகின்றாய் விட்டத்தில்

4. உன்னைப்போல நானுமே
உண்மையா யுழைப்பேனே.

## 4. நாய்க்குட்டி

1. நாய்க்குட்டி நாய்க்குட்டி
நான்வளர்க்கும் நாய்க்குட்டி

2. வாலையாட்டும் நாய்க்குட்டி
பல்லைக்காட்டும் நாய்க்குட்டி

3. காலைமேலே வைப்பாயே
கட்டி என்னைப் பிடிப்பாயே

4. வீட்டை நீயும் காப்பாயே
ஊட்டி நானும் வளர்ப்பேனே.

## 5. மரப்பாய்ச்சி

1. மரப்பாய்ச்சி மரப்பாய்ச்சி!
மடியின்மேலே உட்காரு

2. சாதம் நன்றாய்ச் சாப்பிடு
போதும் என்றால் போட்டிடு

3. பட்டுமெத்தை விரித்துக்கொள்
தொட்டிலிலே படுத்துக்கொள்

4. ஆடிப்பாடிக் கூத்தாடு
ஓடிக் கூடிவிளையாடு.

## 6. மழை

1. மழையே மழையே ஓடிவா
தலையின்மேலே வழிந்துபோ

2. வானத்திலே மேகப்பார்
வீதியிலே மழையைப்பார்

3. கப்பலை நான் செய்வேனே
தெப்பம்போல விடுவேனே

4. கூரையிலே சொட்டுவாய்
கையிலேநா னேந்துவேன்.

## கதைப் பாட்டு

### 1. பொய் சொன்ன இடைப்பையன்

'நோட்டு' மெட்டு

1. ஆடு மேய்க்கும் ஒரு சிறுவன்
ஐயோ! புலி! யெனப் பொய்சொன்னான்
அருகில் ஜனங்கள் வந்தவுடன்
சிறுவனும் சிரித்து நின்றனனே

2. பிறகு ஒருநாள் புலிவரவே
சிறுவன் கதறி யழுதனனே
ஒருவரும் அவனை நம்பவில்லை
சிறுவனைப் புலி கொன்று தின்றதுவே.

## 2. பொன்முட்டை

‘நோட்டு’ மெட்டு

1. கந்தன் வளர்த்த வாத்தொன்று
தந்தது தினம் பொன்முட்டை யொன்று
அந்த முட்டை முழுவதையும்
அடையவே ஒருநாள் ஆசைப்பட்டான்

2. கத்தி ஒன்றால் குத்தியே
வாத்தின் வயிற்றைக் கிழித்தானே
ஐயோ ! ஒரே முட்டையொன்றை
அவனும் கண்டு வருந்தினான்.

## 3. தவளைகளும் சிறுவர்களும்

‘பச்சைமலை பவளமலை’ என்ற மெட்டு.

1. தவளையெல்லாம் ஒரு குளத்தில்
தாவி விளையாட
சிறுவரந்தக் குளத்தில் கல்லை
எறிந்து விளையாட

2. பெருந்தவளை ஒன்று வந்து
பையன்களைப் பார்த்து,
“ சிறுவருங்க ளாட்டமெங்கள்
ஆபத்துக்கே ஆச்சு ”

3. என்றவுடன் சிறுவரெல்லாம்
அங்கிருந்து சென்றார்
அன்றுமுதல் அந்தவிதம்
ஆடுவதை விட்டார்.

## 4. பூனைக்கு மணிகட்டுவது யார்?

'நோட்டு' மெட்டு

1. எலிகள் இருக்கும் வீடொன்றில்
புலியைப்போலப் பூனையொன்று
எலிகள் அதனைக் கண்டவுடன்
ஒளிந்து பதுங்கி ஓடிவிடும்.

2. அருகில் வரும் பூனையை
அறிவதற்கு எலிகளுமே
சிறிய மணியை அதன்கழுத்தில்
சரியாய்க் கட்ட நினைத்தனவே

3. மணியைக் கட்டி முடிக்கவே
முடியாதென்று விழிக்கவே
மளமள வென்று பூனைவர
குடுகுடு என்றே ஓடினவே

---

# இரண்டாம் வகுப்பு

# 1. ‘ நிலா நிழல் பூச்சி ’
## என்ற ஓர் விளையாட்டு

1. முற்றத்தில் விளையாடுவோம்
நித்தியம் நிலாவிலே

2. நிலாவிலே நின்றவனே
நீயும் நன்றாய்ப் பார்த்துப்பிடி

3. ஓரிடத்தில் நில்லாதே
ஓடியென்னைத் துறத்து நீ

4. அம்மா! அம்மா! வந்துவிட்டேன்
ஆட்டத்திலே ஜயித்துவிட்டேன்

# 2. குரங்கு

1. குரங்கே குரங்கே கூத்தாடு
மரத்தில் இருந்தே கூத்தாடு

2. தென்னைமரத்தில் ஏறாதே
தேங்காயைப் பறிக்காதே

3. மாமரத்தில் ஏறாதே
மாங்காயைப் பறிக்காதே

4. குட்டிக்கர்ணம் போடுவாய்
சூட்டித்தனங்கள் செய்குவாய்

## 3. யானை

1. யானை யானை யோடிவா
ஆடிக்கொண்டே ஓடிவா
2. மணியை நன்றாய் ஆட்டிவா
மாவுத்தனை யேற்றிவா
3. தும்பிக்கையைத் தூக்கிவா
தந்தத்தையே நீட்டிவா
4. வாலை நன்றாய் வீசிவா
மேலே பூச்சி ஓட்டிவா
5. நானும் உன்மே லேறவே
நாளை நீயும் வருவாயே.

## 4. ஆட்டுக்குட்டி

1. ஆட்டிடையா ஓட்டிப்போ
ஆட்டுக்குட்டி மேய்த்துவா
2. ஒன்றை ஒன்று முட்டினால்
உழக்கு ரத்தம் கொட்டுமே
3. மலையின்மேலே ஏறுமே
பயமில்லாமல் ஓடுமே

4. ஆட்டுப் பாலைப் போட்டியே
பாட்டியென்னை வளர்த்தாளே

5. சாதுவான பிராணியைச்
சாகடித்தல் பாவமே

## 5. பூனை

1. கள்ளா கள்ளா ஓடிப்போ
வீட்டுக் கள்ளா ஓடிப்போ

2. பலகை மேலே ஏறாதே
பாத்திரத்தை உருட்டாதே

3. உன்னுடைய மீசையால்
ஓட்டையை யளப்பாயே

4. ஓடி ஒளிந்து நின்றுகொள்
ஓடும் எலியைப் பிடித்துக்கொள்

5. உறியின்மேலே ஏறாதே
ஒன்றையும் நீ உருட்டாதே

6. உன்பேரையே சொல்லவும்
அஞ்சுகின்றேன் நானுமே

# கதைப் பாட்டு

## 1. ஆப்பைப் பிடுங்கின குரங்கு

'நோட்டு' மெட்டு

1. தச்சன் மரத்தை யறுத்துவிட்டு
தக்க ஆப்பைச் செலுத்தினான்
2. சாப்பாட்டிற்கவன் சென்றபோது
தோப்பிலிருந்த குரங்கொன்று
3. அறுத்த மரத்தில் உட்கார்ந்து
அசைத்து ஆப்பைப் பிடுங்கியதே
4. அந்தப் பிளவில் குரங்கின் வால்
அகப்பட்டங்கு நசுங்கியதே.

## 2. ஆமையும் முயலும்

'நோட்டு' மெட்டு.

1. ஒருநாள் முயலோராமையுடன்
ஓட்டப் பந்தயம் ஓடிற்றே
2. தானே ஜயிப்பதாகவே
தோளைத் தட்டி ஓடிற்றே
3. பந்தயதூரம் பாதிவழி
வந்தவுடன் முயல் தங்கியதே
4. தூங்கி எழுந்தே பார்த்தபோது
தூரத்திலாமையைக் கண்டதுவே
5. முடிந்தமட்டில் ஓடியும்
முடிவில் முயலும் தோற்றதுவே

# 3. பேராசையுள்ள நாய்

'நோட்டு' மெட்டு.

1. நாயும் ரொட்டித்துண்டையே
   வாயில் கௌவிக் கொண்டுமே
2. பாலமொன்றில் போகவே
   பார்த்த தங்கு நீரிலே
3. தன்னைப்போன்ற நாயொன்று
   சின்ன ரொட்டித் துண்டொன்றை
4. வாயில் கௌவி நிற்பதுபோல்
   சாயலங்கு தெரிந்ததே
5. பார்த்து, அதைப் பிடுங்கவே
   பாய்ந்து நாயைப் பிடிக்கவே
6. நாயும் நீரில் குதித்ததே
   நாயின் ஆயுள் முடிந்ததே.

# 4. புலியும் பொன்காப்பும்

'நோட்டு' மெட்டு.

1. பொன்னால் செய்த காப்பொன்றை
   புலியும் காட்டில் பெற்றதே
2. கையில் காப்பை வைத்துக்கொண்டு
   கண்டபேரைக் கூப்பிட்டதே
3. அதிக ஆசை கொண்டொருவன்
   அதையே அடைய எண்ணினான்

மறைமலையடிகள் நூல்நி...
MARAIMALAI ...

4. வழியில் குளமொன்றிருந்ததனால்
மளமள வென்றதில் இறங்கினான்
5. சேற்றில் அவன் கால் சிக்கவே
தாவிப் புலியும் பாய்ந்ததே
6. ஐயோ! அவனைப் பேராசை
ஆபத்திற்குள் ளாக்கியதே.

## 5. புறாவும் எறும்பும்

'நோட்டு' மெட்டு.

1. மரத்தில் இருக்கும் புறாவொன்றைக்
குறிவைத்தம்பை எய்யவே
2. எண்ணிய வேடனை எறும்பொன்று
அங்கவன் காலைக் கடித்ததுவே
3. குறியுந்தவறிப் போய்விடவே
புறாவும் பறந்து போயிற்றே
4. பிறகொருநாளச் சிற்றெறும்பு
அருகிலிருந்த ஆற்றில்விழ
5. பார்த்தே புறாவும் ஓரிலையை
பறித்து ஆற்றில் போட்டதுவே
6. எறும்பும் இலையில் ஏறிக்கொண்டு
கரைக்குச் சென்று ஓடிற்றே.

# மூன்றும் வகுப்பு

## 1. பசுவுங்கன்றும்

1. கன்றுக்குட்டி துள்ளிஓடு
கன்றின் தாயே கன்றுபோடு
2. பால் கறந்து நான் குடிப்பேன்
நான் வளர்க்கும் நாய் குடிக்கும்
3. சட்டியில் பால்விட்டுக் காய்ச்சி
சொட்டு மோரை விட்டுப்பாரு
4. கட்டித்தயிரும் கெட்டி மோரும்
சிட்டி வெண்ணெய் கிட்டும் பாரு
5. கட்டுப்புல்லைக் கிட்டவைத்தால்
எட்டி என்னை முட்டுவாயோ ?
6. மாட்டுக்காரா பாட்டுப் பாடி
மாட்டை ஓட்டி மேய்த்து வாடா

## 2. கிளி

1. பச்சைக்கிளியே பறந்து வா
மச்சுமேலே இறங்கி வா
2. மிளகாய்ப் பழம்போல் மூக்கைப்பார்
மிளகாய்ப் பழத்தைத் தின்று பார்
3. கெட்டியான மூக்கினால்
கொட்டைப் பாக்கை வெட்டித்தா

4. கூட்டில் உன்னை வைப்பேனே
ஊட்டியே வளர்ப்பேனே

5. பூனைகள் பிடிக்காமல்
நானும் உன்னைக் காப்பேனே

6. சொன்னதையே சொல்லு நீ
சோறும் பாலும் தருவேனே.

## 3. கலியாண வீடு

1. கலியாண வீட்டிலே
கொட்டுமேளம் பந்தலிலே

2. தாருடே வாழைமரம்
தோரணங்கள் தொங்குமே

3. மணையிலே மாப்பிள்ளை
குணமுள்ள பெண்ணோடே

4. யார்மேலே பார்த்தாலும்
மார்மேலே சந்தனம்

5. தாம்பாளத் தட்டிலே
தாம்பூலம் தருவாரே

6. பையன்களைப் பாருங்கள்
கைகளிலே அப்பளாம்

7. எங்களக்காள் கலியாணம்
பங்குனி மாசத்திலே

## 4. கோயில்

1. கோபுரந் தெரியுது
கோவிலங் கிருக்குது

2. கெட்டிமேளம் கொட்டுவர்
கட்டிச்சூடம் கொளுத்துவர்

3. சந்நிதியில் நிற்போமே
கன்னத்திலே போட்டுமே

4. வாரைமேலே சாமியை
வாகனத்தில் வைப்பாரே

5. தேரில்வரும் சாமியைத்
தெருவிலே நாம் பார்ப்போமே

6. அன்புடனே சாமியைக்
கும்பிடுவோம் நாமுமே.

## 5. விளையாட்டு

'ஆடு பாம்பே'—என்ற மெட்டு

ஆடு பாப்பா நன்ருய் ஆடு பாப்பா
ஓடி ஒன்ருய்க் கூடி விளையாடு பாப்பா

1. வெட்ட வெளியில் விளையாடு பாப்பா
பட்டப் பகலில்அதாகாது பாப்பா

2. காலை மாலைகளிலே கூடுபாப்பா
காலுங்கையும் பலம்பெற ஆடுபாப்பா

3. சின்னஞ் சிறுவரோடு சேருபாப்பா
சண்டைசச் சரவுசெய் யாதேபாப்பா

4. அன்பை வளர்க்கமனம் கொண்டுபாப்பா
ஆனந்தம் பெறவேஎண்ணி ஆடுபாப்பா.

## சிங்கமும் சுண்டெலியும்

நோட்டு மெட்டு

1. காட்டில் இருந்த சிங்கமொன்று
வேட்டையாடிக் களைத்ததுவே
2. சிங்கம் சற்று தூங்கவே
சுண்டெலி யொன்று வந்ததுவே
3. தூங்கும் சிங்கம் மேலேறித்
தொந்தரைகள் செய்ததுவே
4. கண்டு சிங்கம் கோபித்துச்
சுண்டெலியைக் கொன்றுவிட
5. எண்ணியதை, கண்டெலியும்
தன்னைவிட வேண்டியதே
6. பிறகொருநாளச் சிங்கம்
சரியாய் வேடன் வலையொன்றில்
7. சிக்கித்தப்ப வழியின்றித்
துக்கித்தங்கு கர்ஜிக்கச்
8. சுண்டெலி யங்கே ஓடிவந்து
துண்டித்தது வலையெல்லாம்
9. கட்டவிழ்ந்த சிங்கமும்
கட்டம் நீங்கி ஓடிற்றே.

# குதிரையின் அன்பு

## (தேசிங்குராஜன் கதை)

மோவுத்துக்காரன் இறந்ததற்கு நீலவேணிக் குதிரைவருந்துதல்

1. சுற்றிச்சுற்றி வருகுதையா நீலவேணிக்குதிரை
முகர்ந்து முகர்ந்து அழுகுதையா நீலவேணிக்
குதிரை

2. கண்ணில் நீரும் பொங்கிவருகுது நீலவேணிக்
குதிரை
கட கடவென்று புரண்டழுகுது நீலவேணிக்
குதிரை

3. இரண்டுதாண்டில் வந்துநின்றது ராஜா
முன்பாக
மண்டிப்போட்டுப் படுத்ததுபாரு நீலவேணிக்
குதிரை

4. பட்டாஉருவிக் கையிலே பிடித்தான் ராஜா
தேசிங்கு
இரண்டுதுண்டாகத் தீர்த்தானையா ராஜா
தேசிங்கு

5. குதிரையைக்கூடப் புதைத்தானையா ராஜா
தேசிங்கு

# இளமையில் தேசிங்கின் வீரம்

தேசிங்கு—பாராசாரி என்னும் குதிரையை யடக்குதல்

1. குதிரையைப் பார்த்துப் பயப்பட்டு நீங்கள்
கொடிய சிறையிருந்தீர்
குதிரையேறிச் சவாரிசெய்து கொண்டுபோவே
னென்முன்

2. புலிக்குட்டிபோலப் பாய்ந்தவனும் புரவி
யேறினனும்
கிடகிடவென்று கிளம்பிக்குதித்தது அந்தக்
குதிரைதானும்

3. லகானையிழுத்துக் கையிலேபிடித்தான் ராஜா
தேசிங்கு
பக்கச்சிமிட்டாக் கொடுத்துக்கொண்டு பாலன்
வாரானே

4. கலகல, கலகல, கலகலவென்று கனைத்து
வருகுதுபார்
பாராசாரியைக் கொண்டுநிறுத்தினன் பால
சூரியன்போல்

5. டில்லிபதுரையும் தேசிங்குராஜனைச் சேர்த்
தணைத்தெடுத்து
உயர்ந்தசிம்மா ஸனத்தில்வைத்து ஒதுங்கிப்
பக்கம் நின்முர்.

# அல்லி அரசாணிமாலை—புகழேந்தி

## பாண்டிநாட்டுச் சிறப்பு

சோலை மலருடைய சொக்கர் கிருபையினால்
அங்கையற்கண் மீனாக்ஷி அம்மையருளாலே
மாதமொன்று மும்மாரி வருஷிக்குந் தென்மதுரை
பஞ்சங் கிடையாது பாண்டிவள நன்னாட்டில்
கூலிகுறையாது குறைமரக்கா லளக்கார்கள்
அங்காடிக் கூடை யதிரவிலை கூறார்கள்
ஏழை பரதேசி இல்லறம் குடிவாழ்க்கை
தழைத்தோங்கி வாழ்வார்கள் சங்கரன் கிருபை
யினால்
எங்கெங் கினுமிருந்து ஏழைபர தேசிகளும்
அடுப்பார் பரிசனங்கள் அந்த மதுரையிலே
மதுரையை யடுத்தவர்கள் வாழ்வரசு பெற்றிடுவர்.

---

# அல்லியரசாணிமாலை—குறம்

குறத்தி அர்ச்சுனனுக்குக் குறிசொன்னது

'பச்சைமலை பவளமலை' என்றமெட்டு.

சந்த்ரகுல ராஜாக்கள் தருமரைவர் நீங்கள்
தரணிமுழு தாளுகின்ற தருமர்தம்பி நீதான்
சிலைநுதலின் வடிவழகன் தேர்விஜயன் நீதான்
தீர்த்தயாத்திரை போகவென்று தோழனுடன்
வந்தாய்

வடிவழகிச் சிலைநுதலாள் தென்மதுரை வாழும்
மாதரந்த அல்லியின்மேல் மையல் கொண்டாய்
நீயும்

ஆறுயிரம் பாண்டியர்க்கும் அரியதுரைமகளாம்
அல்லியின்மே லாசைகொண்டு அலைகிறடாயிப்போ
பொய்யோடா என்குறிகள் மெய்யோ நீ புகல்வாய்
புண்ணியனே தருமர்தம்பீ புதுமையுடன்
சொல்வாய்

என்றவனைத் தான்பார்த்து இணைவிழியாள் மிரட்டி
இளங் குறத்தி தனைப்போல இடைதுவள
நகைத்தாள்.

MARAIMALAI ADIGAL LIBRARY
72052

இதே விதமாகச்

சங்கீத பாடப் புத்தகம்

IV, V வகுப்புக்களுக்குரியது

தயாராகிறது.

Imperial Press,
Tirchy